Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 25

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. "அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தன்னை" அறம் என்பதன் எதிர்ப்பதம்
   1. தர்மம் 2.மறம் 3. புறம் 4. தவம்

02. நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம்" என்பதில் மதி எனப்படுவது
   1. அறிவு 2. சந்திரன் 3. அழகு 4. மதித்தல்

03. இல்லாளின் இயற்கை எழில் என்மனதை வெல்லும் என்ற தொடரில் எழில் என்பது
   1. அழகு 2. அறிவு 3. அமைதி 4. அடக்கம்

04. பயனற்ற முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடுவதை குறிக்கும் உவமைத்தொடர்
   1. இலவுகாத்த கிளிபோல
   2. உமிகுற்றிக் கைசலித்தால் போல
   3. முயற்கொம்பு போல
   4. கல்லிலே நார்உரிப்பது போல

05. பின்வருவனவற்றுள் வினைமுற்றுத்தொடராய் அமைவது
   1. கண்ணா வா 2. கண்ணன் வந்தான் 3. வந்தான் கண்ணன் 4. வந்தகண்ணன்

பகுதி 2

பின்வரும் வினாக்களுக் சுருக்கமாக விடை எழுதுக

1) மூத்தம்மா பால்கறக்கும் காட்சி பேரனால் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

2) ஊணையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்த்தவர்களாக யாரை குறிப்பிடுகின்றார்?

3) அற்றைத்திங்கள் என்ற பாடலில் திணை துறை என்பவற்றை குறிப்பிடுக

4) அற்றைத்திங்கள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

5) தன்னை மறைக்கத்தானோ அவ்விறைவனும் தளிர்பசும்புல்லால் தரை மறைத்தனனோ என்ற அடிகளில் இடம்பெறும் அணியை விளக்குக

6) சீறிஓடாத வருங்கால மனிதநதி என்ற தொடரில் இடம்பெறும் அணி என்ன?

7) மூத்தம்மாவின் அன்றாட செயற்பாடுகளில் நான்கினை குறிப்பிடுக

8) எழுத்தறிவற்ற இளைஞனின் நிலைக்கு காரணமாக கவிஞர் எதனை குறிப்பிடுகின்றார்?

9) முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம்பூக்களாக கவிஞர் எதனை, யாரை குறிப்பிடுகின்றார்?

10) எழுத்தறிவற்ற இளைஞனின் இளமைத்தோற்றத்தினை கவிஞர் எவ்வாறு சித்திரிக்கின்றார்?